முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2025) சென்னை, ஐ.டி.சி கிராண்ட் சோழா ஓட்டலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், CtrlS குழுமம் 4,000 கோடி ரூபாய் முதலீட்டில், 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அம்பத்தூரில் அமைத்துள்ள CtrlS சென்னை தகவல் தரவு மையத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறைச் செயலாளர் வி.அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, CtrlS குழுமத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஸ்ரீதர் பின்னப்புரெட்டி, நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25-2-2025) சென்னையில் நடைபெற்ற என்.ஆனந்தன் திருமதி ஆ.தேவிகா தம்பதியரின் மகள் ஆ. நித்யா (எ) யோகிதா ஏ.ஜி.மகேஷ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழக தலைவர் துறைமுகம் காஜா மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2025) சென்னை, ராஜீவ் காந்தி சாலை (ஓ.எம்.ஆர்) டைடல் பார்க் சந்திப்பில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் ரூ.27.50 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 'U' வடிவ மேம்பாலத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவன நிர்வாக இயக்குநர் டி. பாஸ்கர பாண்டியன்.இ.ஆ.ப. நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் எஸ்.பழனிவேல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.2.2025) சென்னை, ராஜீவ் காந்தி சாலை (ஓ.எம்.ஆர்) டைடல் பார்க் சந்திப்பில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் ரூ.11.30 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள நடைமேம்பாலத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவன நிர்வாக இயக்குநர் டி. பாஸ்கர பாண்டியன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் எஸ்.பழனிவேல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி நாள்தோறும் 1000 பேருக்கு

அன்னம் தரும் அமுதக் கரம்! ஆறாம் நாள்!

துறைமுகம் மேற்குப் பகுதியில் அமைச்சர் – பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, பிப். 26 -

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் ஆறாம் நாள் துறைமுகம் மேற்கு பகுதியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 6ஆம் நாளான நேற்று (25.2.2025) துறைமுகம் மேற்கு பகுதி, மண்டலம்5, 57வது வார்டு, யானைகவுனி, ஜட்காபுரம் மற்றும் வால்டாக்ஸ் ரோடு, கல்யாணபுரம் ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர் பி.ஸ்ரீரா முலு, பகுதி செயலாளர் எஸ்.முரளி, மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ் ஜெயின், எம்.இசட். ஆசாத், துறைமுகம் மேற்கு பகுதி வட்ட செயலாளர்கள்: எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதீஷ்குமார், வே.பா.பிரபாகரன் இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜி.ராமமூர்த்தி தலைமையில்

துறைமுகம் மேற்கில் மக்கள் முதல்வரின் மனிதநேயப் புகழரங்கம்!

நடிகர் வடிவேலு - நடிகை குட்டி பத்மினி - நடிகர் அஜய் ரத்தினம் சிறப்புரை!

சென்னை, பிப். 26 -

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப் பகுதி, 57 வது வட்ட தி.மு.க. சார்பில் மனித நேயம் - 7, மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா முன்னிட்டு புகழரங்கம் நாளை (27.02.2025 - வியாழக்கிழமை) மாலை 6 மணிக்கு, சென்னை, ரமணன் ரோடு, யானை கவுனி, இந்திரா காந்தி சிலை அருகில் நடைபெறுகிறது.

57 வது வட்டக் கழகச் செயலாளர் ஜி.ராமமூர்த்தி தலைமை வகிக்கிறார்.

மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி., எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இரா. நரேந்திரன், எம்.விஜயகுமார், ப.ஸ்ரீராமலு, ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, இரா.கலைச்செல்வி, எம்.இப்ராஹிம் கனி, எல்.சம்பத்குமார், பி.விஜயகுமார், எம். விநாயகம், பா.பிரதீப்குமார், பா.ஜெகதீஷ், ஆர்.மாரி, கே.ஆர். மதன், ஏ.பி.எஸ்.செந்தில், டி.கே.கலைவாணன், ராஜேஷ் ஜெயின், வெ.பரிமளம், எல். நவீன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மே.ஜனார்த்தனன், கே.ஆர். அபரஞ்சி, ம.முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ. தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன், மா. ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், பா.கதிரவன், பா.அண்ணாதுரை, டி.சதீஷ்குமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், த.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், எல்.சத்திய நாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், கே.கவியரசு, நா.பார்த்திபன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் நடிகர் வடிவேலு, நடிகை குட்டி பத்மினி, நடிகர் அஜய் ரத்தினம் ஆகியோர் புகழுரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ரங்கநாதன், கே.சந்துரு, பி.கே.மூர்த்தி, கே. எஸ்.எம்.நாதன், தமிழன் பிரசன்னா, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, வே.உமா காந்த், பரிதி இளம் சுருதி, கோ.ஏகப்பன், தேவ ஜவகர், புனிதவதி எத்திராசன், டி.எஸ்.சேகர், எல். எழில் அரசு, லண்டன் க.முருகன், ஜி.மாசிலாமணி, எம். வி.ஆர்.சரவணகுமார், எம்.நாராயணன், வி.எம்.முருகவேல், வி.அசோக்குமார், நா.ரஞ்சித் விஜயாலயன், வி.சங்கர், எஸ். கதிர்வேலு, ஆர்.தங்கமணி, ஏ. மதுசூதனன், பி.ஜி.சுகுமார், டி.சுபாஷ் சந்திரபோஸ், ஹாஜி முகமது அலி, சேகர் (எ) பிரஸ் சேகர், வீடியோ கே.சம்பத், எம். சுரேஷ், பி.சகாயராஜ் மற்றும் பகுதி கழகச் செயலாளர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் கலந்துகொள்கின்றனர்.

கே.முத்து நன்றி கூறுகிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.02.2025) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் சென்னை, கோபாலபுரத்தில் 8 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 'கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமி' கட்டடத்தை திறந்து வைத்து, அங்கு நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் வெற்றி பெற்ற குத்துச்சண்டை வீராங்கனைக்கு கோப்பையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா. எழிலன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

கழகத் தீர்மானக் குழு நிர்வாகிகள் கூட்டம்!

தீர்மானக்குழுச் செயலாளர்கள் அறிவிப்பு!

சென்னை, பிப்.26-

தி.மு.க. தீர்மானக்குழு நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 28.2.2025 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில், கழக தீர்மானக்குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தீர்மானக்குழு மாநிலநிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : 1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா,

2. கழக ஆக்கப் பணிகள் - குறித்து ஆலோசிக்கப்பட இருப்பதாக தீர்மானக் குழுச் செயலாளர்கள். மீ.அ.வைத்தியலிங்கம், கீரை எம்.எஸ். விஸ்வநாதன் அக்ரி கே.பி.டி. கணேசன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தி.மு.கழக கலை – இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மாநில துணைச் செயலாளராக தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட எம்.எஸ்.ஹரிபாபு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களிடம் வாழ்த்து பெற்றார்.

கழகத் தலைவர் கட்டளைப்படி

'வெல்வோம் இருநூறு' எனும் வரலாற்று வெற்றிக்கு களத்திலும் தளத்திலும் போராடுவோம்!

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடந்த நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப்.26-

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா தலைமையில் 24.02.25 அன்று சென்னை அன்பகம் அண்ணா அரங்கில் நடைபெற்ற மாநில துணைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:-

தீர்மானம் 1

தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்திட அன்றாடம் ஓயாது உழைத்து, தனது தலைமையிலான திராவிட மாடல் அரசின் திட்டங்கள், பல மாநிலங்களை மட்டுமின்றி, உலக நாடுகளையும் ஈர்க்கின்ற வகையில் திறன்மிகு நிர்வாகத்தில் அனைத்து துறைகளிலும் தமிழ்நாட்டை வளர்ச்சி அடையச் செய்திருப்பதுடன், 2019 நாடாளுமன்றத் தேர்தல் தொடங்கி, 2025 ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் வரை கண்ட தேர்தல் களங்கள் அனைத்திலும் வெற்றி முத்திரையைப் பதித்து, தமிழ்நாடு மட்டுமின்றி அனைத்து மாநிலங்களின் உரிமைக்கான முதல் முழக்கத்தை முன்னெடுக்கும் ஜனநாயகப் போராளியாகவும் திகழும் திராவிட நாயகன்கழகத் தலைவர்மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை கழகத் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் 720 நிகழ்ச்சிகளை நடத்தி சிறப்பாகக் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 2

75 ஆண்டுகால திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு, போராட்டம், தியாகம், சாதனைகள் இவற்றால் தமிழ்நாடு மிகச் சிறந்த மாநிலமாகத் திகழ்வதை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்கும் வகையில் சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு, அரசியலில் நமக்கெதிரான இனப் பகைவர்களையும் அவர்களின் கைக்கூலிகளையும் கொள்கை ஆயுதத்தால் எதிர்கொண்டு விரட்டியடித்து வரும் கழகத்தின் இளந்தலைவர் துணை முதலமைச்சர் இளைஞரணிச் செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணி தளத்திலும் களத்திலும் பணியாற்றும் என்ற உறுதியினை அளித்து, கழகத்திற்கும் திராவிட மாடல் அரசுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் ஓய்வின்றி செயலாற்றி வரும் இளந்தலைவர் அவர்களுக்கு இந்தக் கூட்டம் தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 3

தி.மு.கழகத்தின் துணை அமைப்புகளான சார்பு அணிகளைச் சார்ந்த உடன்பிறப்புகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் இளந்தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி 'தலைவர் 72' மாபெரும் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியை நடத்திய கழகத்தின் விளையாட்டு மேம்பாட்டு அணிக்குப் பாராட்டுகளைத் தெரிவித்து, ஆண்கள் அணிக்கான போட்டியில் இறுதி வரை சிறப்பாகவும் நேர்த்தியான கிரிக்கெட் வீரர்களுக்கு இணையாகவும் விளையாடி இரண்டாம் இடத்திற்கான கோப்பையையும், பெண்கள் அணிக்கானப் போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்தி முதலிடத்திற்கான வெற்றிக் கோப்பையையும் வென்ற தகவல் தொழில்நுட்ப அணியின் ஆண்பெண் கிரிக்கெட் வீரர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 4

தி.மு.க.வையும் நம் இளந்தலைவர் அவர்களையும் சீண்டிப் பார்க்க நினைத்த தமிழ்நாடு பா.ஜ.க.வின் தலைமைக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் #GetOutModi என்ற ஹேஷ்டேக்கை 1மில்லியனுக்கும் அதிகமான பதிவுகளுடன் உலக அளவில் ட்ரெண்ட் செய்து, அதற்கான ஒருங்கிணைப்பு பணிகளை கழகத்தின் அனைத்து அமைப்புகளுடனும் இணைந்து மேற்கொண்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுக்கும், உலகத் தாய்மொழி நாளான பிப்ரவரி 21 அன்று தமிழ் வாழ்க என்ற ஹேஷ்டேக்கை தளத்திலும், அதற்கான சுவரொட்டியைக் களத்திலும் ட்ரெண்ட் செய்த தகவல் தொழில்நுட்ப அணியின் அனைத்து நிர்வாகிகளுக்கும் இந்தக் கூட்டம் தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் 5

'வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு' என்ற முழக்கத்துடன் 2024 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கழக அணியை மகத்தான வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் கட்டளைக்கிணங்க, தகவல் தொழில்நுட்ப அணியின் கட்டமைப்பு வலிமையை கடைக்கோடி வாக்குச்சாவடி வரை பலப்படுத்தும் முயற்சியாக, கழக அணிகளிலேயே முதல் அணியாக பூத் ஒருங்கிணைப்பாளர்கள் (AC3) அறிவிப்பை கழகத்தின் ஆவணமாகத் திகழும் முரசொலியில் வெளியிடச் செய்த தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளர் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதுடன், அவருடைய கட்டளைக்கிணங்க அனைத்து கழக மாவட்டங்களிலும் பூத் ஒருங்கிணைப்பாளர்களை (AC3) முழுமையாகப் பெற்று தமிழ்நாட்டில் உள்ள ஏறத்தாழ 65,000 பூத்களிலும் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்களை நியமிக்க இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

தீர்மானம் 6

கழகத்தலைவர் இளந்தலைவர் ஆகியோரின் கட்டளைகளை நிறைவேற்றும் வகையிலும், அரசியல் களத்தில் எதிரணியினரின் சூழ்ச்சிகளை முறியடித்திடவும் கழக மாவட்டங்களில் தொகுதி வாரியாக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுக்கு முழுமையான அளவில் சமூக வலைத்தளப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 7

பேச்சாலும் எழுத்தாலும் மக்களிடம் சிந்தனையை விதைத்து, அரசியல் தெளிவை உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களின் மரபார்ந்த வழியில் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்டதொகுதிஒன்றியநகரபகுதிவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரில் பேச்சாற்றல் கொண்டவர்களைத் தொகுதிவாரியாகத் தேர்ந்தெடுத்து, அந்தப் பட்டியலை கழகத் தலைவர் அவர்களிடம் அவரது பிறந்தநாளில் வழங்குவதுடன், பேச்சாற்றல் மிக்க தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுக்கு உரிய பயிற்சி அளித்து கழக மேடைகள், தெருமனைப் பரப்புரை, விவாத அரங்குகள், கருத்தரங்குகள், யூடியூப், சோஷியல் மீடியா என அனைத்துத் தளங்களிலும் களமாடச் செய்வது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 8

தலைவர்களுக்கு மட்டுமின்றி, தொண்டர்களுக்கும் தியாக வரலாறு கொண்ட இயக்கம் தி.மு.கழகம். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கழகத்தின் மூத்த முன்னோடிகளை தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் நேரில் சந்தித்து அவர்களின் கள அனுபவங்களைப் பதிவு செய்யும் கழக வேர்களைத் தேடி என்ற காணொலித் தொடர் தகவல் தொழில்நுட்ப அணியின் சமூக வலைத்தளப்பக்கங்களில் பதிவேற்றப்பட்டு, கழக வரலாறு இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லப்படும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 9

தாய்மொழியைக் காத்திடவும், மாநில உரிமைகளை மீட்டிடவும் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசிடமிருந்து மக்களைப் பாதுகாக்கவும் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களும், இளந்தலைவர் துணை முதலமைச்சர் அவர்களும் எந்தவொரு கட்டளையிட்டாலும் அதனை உடனடியாக களத்திலும் தளத்திலும் நிறைவேற்றிடும் வகையில் தகவல் தொழில்நுட்ப அணியின் அனைத்து நிர்வாகிகளும் செயல்பட்டு, 'வெல்வோம் இருநூறு' என்ற வரலாற்று வெற்றிக்குத் துணை நிற்போம் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் இணைச் செயலாளர் டாக்டர் மகேந்திரன், ஆலோசகர்கள் கவிஞர் மனுஷ்யபுத்திரன், கோவி.லெனின், மாநில துணைச் செயலாளர்கள் எஸ். டி.இசை, சி.ஹெச்.சேகர், டாக்டர் தருண், அழகிரி சதாசிவம், நவீன், சுரேஷ், தமிழ்மாறன், இலக்குவன், தமிழ்மறை, கேசவன், சிவா, விஜயகதிரவன், மதுரை பாலா, பத்மபிரியா, ஸ்ரீதரன், பா.ச.பிரபு மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.